## வகுப்பு - 7 - பருவம்: 3 - வரலாறு

## 3. தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள்

**பயிற்சி வினாக்கள்:**

1. முதல் சமணப் பேரவைக் கூட்டம் நடைபெற்ற இடம் ______.

(1) மகாபலிபுரம் (2) காஞ்சிபுரம் (3) பாடலிபுத்திரம் (4) மதுரை

2. அசௌர்யா என்பது ______.

(1) உண்மை (2) திருடாமை (3) அகிம்சை (4) ஆசைமின்மை

3. ஆகம சூத்திர நூல்களின் எண்ணிக்கை ______.

(1) 12 (2) 24 (3) 13 (4) 22

4. சமண தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் நூல் ______.

(1) மத்தவிலாசபிரகாசனம் (2) மணிமேகலை

(3) சீவகசிந்தாமணி (4) ஜைனசரிதா

5. கல்பசூத்ரா என்ற நூலின் ஆசிரியர் ______.

(1) பத்ரபாகு (2) புஷ்பசேனா

(3) திருத்தக்க தேவர் (4) வஜ்ரபோதி

6. அறிவர் கோவில் என அழைக்கப்படுவது ______.

(1) பைரவ மலை

(2) சந்திரபிரபா கோவில்

(3) திரிலோக்கிய நாத ஜைன சுவாமி கோவில்

(4) சித்தன்ன வாசல் குகை

7. கழுகுமலை சமணர் கோவில் யாரால் உருவாக்கப்பட்டது ______.

(1) புத்த கோசா (2) பராந்த நெடுஞ்சடையன்

(3) யுவான் சுவாங் (4) மகேந்திரவர்மன்

LIVEWORKSHEETS

8. விசுத்திமக்கா என்ற நூலின் ஆசிரியர் _______.

(1) புத்த கோசா (2) அசுவ கோசா (3) மிலிந்தா (4) புத்தர்

9. சமணர்களின் கல்வி மையங்கள் _______.

(1) விகாரைகள் (2) பள்ளி (3) இல்லம் (4) குகைகள்

10. மௌரியப் பேரரசர் அசோகரின் பேரன் _______.

(1) கனிஷ்கர் (2) ஹர்ஷர் (3) தசரதா (4) பத்ரபாகு

11. மௌரியப் பேரரசர் அசோகர் ஆதரித்த மதம் _______.

(1) சமணம் (2) பௌத்தம் (3) ஆசீவகம் (4) எதுவுமில்லை

12. ஆசீவகப் பிரிவின் தலைவர் _______.

(1) கோசலா மன்காலிபுத்தா (2) அசோகர்

(3) தசரதா (4) வஜ்ரபோதி

13. பௌத்த கல்வி மையங்களுக்குப் பெயர் _______.

(1) விகாரைகள் (2) பள்ளி (3) கல்லூரி (4) குகைகள்

14. மத்தவிலாச பிரகாசனம் என்ற நூலின் ஆசிரியர் _______.

(1) கிருஷ்ண தேவராயர் (2) புத்த கோசா

(3) ஹர்ஷர் (4) மகேந்திர வர்மன்

15. முதல் பௌத்த உரையாசிரியர் _______.

(1) புத்தர் (2) மகாவீரர் (3) புத்தகோசா (4) நாகசேனர்

16 புத்தருடைய வாழ்க்கை தொடர்பான பல்வேறு கதைகளை கூறும் நூல் _______.

(1) புத்த வம்சா (2) மலிந்த பன்கா (3) ஜாதகங்கள் (4) தேவாரம்

17 புத்தர் தனது போதனைகளை பரப்புரை செய்த மொழி _______.

(1) சமஸ்கிருதம் (2) பிராகிருதம் (3) தமிழ் (4) பாலி

LIVEWORKSHEETS

18 புத்த சரிதம் என்ற நூலின் ஆசிரியர் ______.

(1) அஸ்வகோஷர் (2) வசுமித்திரர் (3) வஜ்ரபோதி (4) கோசலா

19. சமண சமயம் யாருடைய ஆட்சிக் காலத்தில் செழித்தோங்கியது?

(1) சேரர் (2) சோழர் (3) பாண்டியர் (4) பல்லவர்

20. தவறான இணை எது?

(1) திருப்பருத்திக் குன்றம் - காஞ்சிபுரம்

(2) கழுகு மலை - தூத்துக்குடி

(3) திருமலை - சேலம்

(4) பைரவ மலை - வேலூர்

21. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

(1) சீவக சிந்தாமணி (2) திருக்குறள்

(3) நாலடியார் (4) மணிமேகலை

22. சரியான இணை எது?

(1) கல்பசூத்ரா - புத்த கோசா

(2) விசுத்திமக்கா - சீத்தலை சாத்தனார்

(3) மத்தவிலாச பிரகாசனம் - மகேந்திரவர்மன்

(4) சீவக சிந்தாமணி - பத்ரபாகு

23. பொருத்துக:

(i) 22 வது தீர்த்தங்கரர் - a. இருகப்பா

(ii) 24 வது தீர்த்தங்கரர் - b. நேமி நாதர்

(iii) கீழக்குயில்குடி - c. மகாவிரர்

(iv) புஷ்பசேனா - d. மதுரை

(1) i - c ii - a iii - d iv - b (2) i - b ii - c iii - d iv - a

(3) i - d ii - a iii - c iv - b (4) i - d ii - c iii - a iv - b

LIVEWORKSHEETS

24. கீழ்க்கண்டவற்றுள் எது சரி?

(1) ASI என்பது மத்திய அரசு தொல்லியல் துறை

(2) பொதுவாகத் தமிழர்கள் சுவேதாம்பரர் பிரிவைச் சார்ந்தவர்கள்

(3) பெரும்பாலான அரசர்கள் பௌத்த மதத்தை சார்ந்தவர்கள்

(4) திருவள்ளுவர் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்

25. கீழ்க்கண்டவற்றுள் எது தவறு?

(1) 12 வது ஆகம சூத்திரம் தொலைந்து போனதாக கருதப்படுகிறது

(2) பிகநிதயா என்பது சமண சமய நூல்

(3) அர்த்த மகதி பிராகிருத மொழியில் எழுதப்பட்டது

(4) சமணக் கோவில்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்வது கீழக்குயில்குடி கிராமம்

26. தமிழ்நாட்டிலுள்ள சமண சிலைகளில் மிக உயரமானதாக கருதப்படுவது

(1) மகாவீரர் சிலை (2) நேமிநாதர் சிலை

(3) புஷ்பசேனா சிலை (4) இவைகளில் எதுவுமில்லை

27. திருப்பருத்திக் குன்றம் சமண ஜைன கோவில் எந்த மாவட்டத்தில் உள்ளது?

(1) தூத்துக்குடி (2) திருவண்ணாமலை

(3) மதுரை (4) காஞ்சிபுரம்

28. பைரவ மலை அமைந்துள்ள மாவட்டம் ______.

(1) வேலூர் (2) மதுரை (3) தூத்துக்குடி (4) காஞ்சிபுரம்

29 புஷ்பசேனா என்னும் சமண முனிவரின் சீடர் ______.

(1) இருகப்பா (2) அசோகர்

(3) நேமிநாதர் (4) பராந்தக நெடுஞ்சடையன்

30. பௌத்த துறவிகளுக்கான விதிமுறைகளைப் பற்றி கூறுவது ______.

(1) சுத்த பிடகா (2) வினய பிடகா

LIVEWORKSHEETS

(3) அபிதம்ம பிடகா (4) எதுவுமில்லை

31. தாந்ரீகச் சடங்குகளில் திறன் பெற்று விளங்கியவர் ______.

(1) ஸ்ரீவிஜயா (2) மகேந்திரவர்மன்

(3) வஜ்ரபோதி (4) அஸ்வகோசர்

32. பௌத்தம் சரிவை சந்தித்துக் கொண்டிருக்கும் சமயமென எடுத்துரைக்கும் நூல்

(1) தேவாரம் (2) மத்தவிலாச பிரகாசனம்

(3) சீவக சிந்தாமணி (4) புத்தசரிதா

33. கர்மா, மறுபிறவி மற்றும் முன் தீர்மானம் ஆகிய கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் ______.

(1) சமணர்கள் (2) பௌத்தர்கள் (3) ஆசீவகர்கள் (4) 1 மற்றும் 2

34. புத்தரின் போதனைகளை எடுத்துரைக்கும் நூல் ______.

(1) மகாவம்சம் (2) தீபவம்சம் (3) புத்த வம்சா (4) ஜாதகங்கள்

35. திரிபிடகா என்பதன் பொருள் ______.

(1) மூன்று கூடைகள் (2) மிலிந்தாவின் கேள்விகள்

(3) அகிம்சை (4) பிரம்மச்சரியா

LIVEWORKSHEETS